# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**<u>முன்னிலை</u>**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்கள். 1. CP 1088/ விசாரணை/E/2024, 2. CP 1511/ விசாரணை/E/2024, 3. CP 1671/ விசாரணை/E/2024 & 4. CP 2597/ விசாரணை/E/2024</u>**

திரு.K.பாண்டி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டத் துணை ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம் – 625 532.

******

**<u>இறுதி ஆணை</u>**

இந்த நான்கு வழக்குகளின் மீது இவ்வாணையத்தால் 10.03.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், உசிலம்பட்டி வட்டத் துணை ஆய்வாளர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.நாகேந்திரன் 15.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, உசிலம்பட்டி வட்டாசியர்/மேல்முறையீட்டு அலுவலரின் 13.05.2026 தேதியிட்ட அறிக்கைகளை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. உசிலம்பட்டி வட்டாடசியர்/மேல்முறையீட்டு அலுவலர் 13.05.2026 தேதியிட்ட தனது அறிக்கைகளில், CP 1088/E/2024, CP 1511/E/2024, CP 1671/E/2024 ஆகிய 3 வழக்குகள் தொடர்பாக முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/வட்ட சார் ஆய்வாளர் (தற்போது திருமங்கலம் வட்ட சார் ஆய்வாளர்) திரு.பிச்சைப்பாண்டி என்பவரின் 13.05.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கங்களையும் மற்றும் வழக்கு எண்.CP 2597/E/2024 தொடர்பாக முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/வட்ட சார் ஆய்வாளர் (தற்போது சிவகங்கை மாவட்டம் திருபுவனம் வட்டத் துணை ஆய்வாளர்)திரு.ஜெயபாண்டியன் என்பவரது 14.05.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

3. முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு.பிச்சைப்பாண்டி 13.05.2026 தேதியிட்ட தனது எழுத்துமூலமான விளக்கங்களில், மேல்முறையீட்டாளர் தகவல் கோரிய காலத்தில் உசிலம்பட்டி வட்டாசியர் நிலஅளவைப் பிரிவில் போதுமான களப்பணியாளர்கள் இல்லை என்றும், மக்களுடன் முதல்வர், உங்களைத் தேடி உங்களில் ஊரில், போன்ற சிறப்பு முகாம்கள், வருவாய் தீர்வாய முகாம்கள் அனைத்து கிராமங்களிலும் நடத்தப்பட்டு மனுக்கள் அதிகமாக பெறப்பட்டது என்றும் நிலுவை அதிகமாக இருந்தததால் உசிலம்பட்டி நகரப் பகுதியிலும், உத்தப்பநாயக்கனூர் குறுவட்டம் கூடுதல் பொறுப்பிலும் கவனித்து

நிலஅளவை மனுக்களை குறைப்பதில் அதிக கவனம் செலுத்தியதால் மேல்முறையீட்டாளருக்கு 30 நாட்களுக்குள் தகவல் வழங்க இயலவில்லை என்றும், மேற்படி காரணங்களால் உரிய நாட்களுக்குள் தகவல் வழங்க இயலவில்லை என்றும், இது போன்ற தவறுகள் இனி வருங்காலங்களில் நிகழாவண்ணம் உரிய காலங்களில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தெரிவித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது. மேலும், இனி வருங்காலங்களில் மேல்முறையீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தகவல் வழங்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் முன்னாள் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.

4. முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு.ஜெயப்பாண்டியன் 14.05.2026 தேதியிட்ட தனது எழுத்துமூலமான விளக்கங்களில், மேல்முறையீட்டாளர் தகவல் கோரிய காலத்தில் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான பணிகள், உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது என்றும், வருவாய் துறையின் முக்கிய பணியான வரவாய் தீர்வை பணிகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது என்றும், நிலுவையிலிருந்து 30-க்கும் அதிகமான மனுக்களும், சிறப்பு பட்டாக்கள் வழங்கும் முகாம் தொடர்பான மனுக்களும் அதிக நிலுவை இருந்ததாலும் தகவல் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது என்றும், மேற்படி காரணங்களால் உரிய நாட்களுக்குள் வழங்க இயலவில்லை என்றும், இது போன்ற தவறுகள் இனி வருங்காலங்களில் நிகழாவண்ணம் உரிய காலங்களில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தெரிவித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது. மேலும், இனி வருங்காலங்களில் மேல்முறையீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தகவல் வழங்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் முன்னாள் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.

5. ஆகவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மேற்குறித்த 4 வழக்குகளிலும், மேல்முறையீட்டாளருக்கு குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தகவல் வழங்கப்படாததால், மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்காக சட்டப்பிரிவு 19(8)(b)-ன்கீழ் **ஒவ்வொரு வழக்கிற்கும் தலா ரூ.2,000/- வீதம் மொத்தம் ரூ.8,000/- (ரூபாய் எட்டயிரம் மட்டும்) பொது அதிகார அமைப்பான உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் வழங்கி, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த அறிக்கையை 30.06.2026-க்குள் தவறாமல் பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுகிறது.** மேலும், இவ்வழக்கில் தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில், இவ்வழக்கினை முற்றாக்கம் செய்து 10.03.2026 அன்று உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கில் மேலும் விசாரணை மேற்கொள்ள ஏதுமில்லை என்று தீர்மானித்து, இவ்வழக்கினை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 01.06.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். 1. CP 1088/ விசாரணை/E/2024, 2. CP 1511/ விசாரணை/E/2024, 3. CP 1671/ விசாரணை/E/2024 & 4. CP 2597/ விசாரணை/E/2024**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம்-625 532.

மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர், உசிலம்பட்டி மூலமாக :-

1. பொதுத் தகவல் அலுவலர்/வட்டத் துணை ஆய்வாளர், உசிலம்பட்டி(05.10.2023-16.02.2024)
2. பொதுத் தகவல் அலுவலர்/வட்டத் துணை ஆய்வாளர், உசிலம்பட்டி(10.04.2024 தேதியில்)

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டத் துணை ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்-625 532.

திரு.K.பாண்டி
38 நேரு தெரு, களத்துப்பொட்டல்,
தத்தனேரி, மதுரை-625 018.

Copy to: File

RJ/PS 1.6